8 வது தமிழ் புத்தகம் வினா - விடை அடிப்படையில் தயாரிக்கப்பட்டது :-

1) தாயுமானவர் அவர்கள் யாரிடம் உபதேசம் பெற்று துறவறம் பூண்டார் = திருமூலர் மரபில் வந்த மௌன குருவிடம்

2) தாயுமானவர் துறவறம் பூண்ட ஆண்டு யாது? = 1736 (31 வது அகவை)

3) 'முத்தே பவளமே மொய்த்த பசும் பொற்சுடரே' - எனத் தொடங்கும் பாடலை பாடியவர் யார்? = தாயுமானவர்

4) தாயுமானவர் பிறந்த இடம் யாது? = நாகப்பட்டினம் மாவட்டம் - திருமறைக்காடு எனும் வேதாரண்யத்தில்

5) தாயுமானவர் பணிபுரிந்த பணியின் பெயர் யாது? = கணக்கர்

6) தாயுமானவர் யாரிடம் கணக்கராக பணிபுரிந்தார்? = திருச்சிராப்பள்ளியை ஆண்ட விஜயரங்க சொக்கநாத நாயக்கர் என்ற அரசர் மற்றும் அவர் மனைவி இராணி மீனாட்சி ஆட்சியிலும் கணக்கராகப் பணியாற்றினார்.

7) 'தாயுமானவர் திருப்பாட்டு பாடல்' நூலில் உள்ள தலைப்புகளில் சிலவற்றைக் கூறுக? = பராபரக்கண்ணி, எந்நாட்கண்ணி, கிளிக்கண்ணி, ஆன்ந்தக்களிப்பு

8) தாயுமானவரின் குறிக்கோள் யாது? = எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே

9) தாயுமானவரின் காலம் யாது? = 18 ஆம் நூற்றாண்டு

10) தாயுமானவரின் மனைவி பெயர் யாது? = மட்டுவார் குழலி

11) தாயுமானவரின் தந்தை மற்றும் தாய் பெயர் யாது? = கேடிலியப்ப பிள்ளை, கெஜவல்லி அம்மாள்

12) 'தாயுமானசுவாமிகள் திருப்பாடல் திரட்டு' - என்ற நூலின் சிறப்பு பெயர் யாது? = தமிழ் மொழியின் உபநிடதங்கள்

13) மனத்தூய்மை, பக்திச்சுவை ஆகியவற்றை ஊட்டும் நூல் யாது? = தாயுமானவர் பாடல் திரட்டு

14) 'தாயுமானசுவாமிகள் திருப்பாடல் திரட்டு' - என்ற நூலின் நூல் அமைப்பு யாது? = 36 தலைப்பு + 56 பிரிவு + 1452 பாடல்கள்

15) யாருடைய பாடல்களில் உவமைகளும் பழமொழிகளும் மிகுதியாக நிறைந்துள்ளன? = தாயுமானவரின் பாடல்களில்

16) தாயுமானசுவாமிகள் திருப்பாடல் திரட்டு - என்ற நூலில் இடம் பெற்றுள்ள 1452 பாடல்களில் எத்தனை பாடல்கள் கண்ணிகளாகவும், வெண்பாக்களாகவும் உள்ளன? = 771 பாடல்கள் கண்ணிகளாகவும் + 83 பாடல்கள் வெண்பாக்களாகவும் இடம் பெற்றுள்ளன

17) தாயுமானவர் நினைவு இல்லம் அமைந்துள்ள இடம் எது? = இலட்சுமிபுரம் - இராமநாதபுரம் மாவட்டம்

18) தாயுமானவர் எழுதிய பாடல்களில் எந்த தலைப்பின் கீழ் அமைந்த பாடல்கள் மிகவும் புகழுடையது? = பராபரக்கண்ணி

19) வள்ளலாரும், பாரதியாரும் எளிய கவிதைகள் பாட முன்னோடியாகத் திகழ்ந்தவர் யார்? = தாயுமானவர்

20) தமிழில் மெய்ப்பொருள் பற்றி புகழ்பெற்ற பாடல்களை இயற்றியவர் யார்? = தாயுமானவர்

21) அணு துளைக்காத கிரெம்ளின் மாளிகை அமைந்துள்ள நாடு எது? = உருசியா

22) அணு துளைக்காத கிரெம்ளின் மாளிகையின் சுரங்கப் பாதுகாப்புப் பெட்டகத்தில் உள்ள தமிழ் நூல் எது? = திருக்குறள்

23) இங்கிலாந்து நாட்டின் அருங்காட்சியகத்தில் எந்த நூலுடன் இணைத்து திருக்குறள் வைக்கப்பட்டுள்ளது? = விவிலியம்

24) ஜி.யு.போப் அவர்கள் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்ட ஆண்டு யாது? = 1886 - (82 வது அகவையில்)

25) பேதையர் நட்பு எதை போன்றது என்று திருவள்ளுவர் தன் நூலில் குறிப்பிடுகிறார்? = தேய்பிறை போன்றது

26) பண்புடையார் நட்பு எதை போன்றது என்று திருவள்ளுவர் தன் நூலில் குறிப்பிடுகிறார்? = நவில்தொறும் நூல்நயம் போன்றது

27) அறிவுடையார் நட்பு எதை போன்றது என்று திருவள்ளுவர் தன் நூலில் குறிப்பிடுகிறார்? = வளர்பிறை போன்றது

28) படிக்கும் போது உதடுகள் ஒட்டி நிற்கும் குறள் அமைப்பு திருக்குறளின் எந்த குறளில் இடம்பெற்றுள்ளது? = குறள் 350

எ.கா :- (பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு) - குறள் 350

29) 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' - என்று திருவள்ளுவரை புகந்தவர் யார்? = பாரதியார்

30) 'வள்ளுவனை பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே' - என்று திருவள்ளுவரை புகந்தவர் யார்? = பாரதிதாசன்

31) ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் வீரமாமுனிவரின் எந்த நூலை கதம்பமாலை என்று புகழாரம் சூட்டுகிறார்? = தேம்பாவணி மற்றும் காவலூர்க்கலம்பகம்

32) ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் வீரமாமுனிவரின் எந்த நூலை பொன்நூல் என்று புகழாரம் சூட்டுகிறார்? = தொன்னூல் விளக்கம்

33) ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் வீரமாமுனிவரின் எந்த நூலை முத்தாரம் என்று புகழாரம் சூட்டுகிறார்? = சதுரகராதி

34) வீரமாமுனிவர் தமிழ் முனிவர்களுள் ஒருவராக விளங்குகின்றார் - என்று பாராட்டியவர் யார்? = ரா.பி.சேதுப்பிள்ளை

35) வீரமாமுனிவர் எழுதிய நகைச்சுவை நூல் யாது? = பரமார்த்த குரு கதை

36) வீரமாமுனிவர் பிறந்த நாடு யாது? = இத்தாலி

37) வீரமாமுனிவரின் இயற்பெயர் யாது? = கான்ஸ்டாண்டின் ஜோசப் பெஸ்கி

38) வீரமாமுனிவர் எந்த வயதில் இந்தியா வந்தார்? = 30 வது அகவையில்

39) வீரமாமுனிவர் எந்த ஆண்டு இந்தியா வந்தார்? = 1710

40) வீரமாமுனிவர் எழுதிய இலக்கண நூல் யாது? = தொன்னூல் விளக்கம்

41) தமிழ் எழுத்து வரிவடிவத்தை திருத்தி, எழுத்துச் சீர்திருத்தம் செய்தவர் யார்? = வீரமாமுனிவர்

42) குணங்குடி மஸ்தான் சாகிபு என்ற புலவரின் இயற்பெயர் யாது? = சுல்தான் அப்துல் காதிறு

43) 'மாதவஞ்சேர் மேலோர் வழுத்தும் குணங்குடியான்' - என்று அழைக்கப்படுபவர் யார்? = சுல்தான் அப்துல் காதிறு

44) குணங்குடி மஸ்தான் சாகிபு ஞானம் பெற்ற இடங்கள் யாது? = சதுரகிரி, புறாமலை, நாகமலை, ஆனைமலை

45) தாயுமானவரின் பராபரக்கண்ணிபோல் பாடியவர் யார்? = குணங்குடி மஸ்தான் சாகிபு

46) குணங்குடி மஸ்தான் பாடிய கண்ணிகள் சிலவற்றைக் கூறுக? = பராபரக்கண்ணி, எக்காலக்கண்ணி, மனோன்மணிக் கண்ணி (100 பாடல்கள்), நந்தீசுவரக்கண்ணி (51 பாடல்கள்), நிராமயக்கண்ணி (100 பாடல்கள்),

47) இஸ்லாமிய தாயுமானவர் என்று அழைக்கப்படுபவர் யார்? = குணங்குடி மஸ்தான் சாகிபு

48) குருநிலை, துறவுநிலை, தவநிலை, நியமநிலை, காட்சிநிலை, தியான நிலை, சமான நிலை - எனப் பொருள்படும்படி பாடல்களைப் இயற்றியவர் யார்? = குணங்குடி மஸ்தான் சாகிபு

49) நான்மணிமாலை என்ற நூலை இயற்றியவர் யார்? = திருத்தணி சரவணப் பெருமாள்

50) ‘தடை உண்டு என உரைப்பார் தமிழுலகில் இல்லை’ - என்று கூறியவர் யார்? = திருத்தணி சரவணப் பெருமாள்

51) யார் மீது கொண்ட அன்பினால் திருத்தணி சரவணப் பெருமாள் அவர்கள் நான்மணிமாலையை இயற்றினார்? = குணங்குடி மஸ்தான் சாகிபு

52) ஆறுமுகநாவலர் பிறந்த ஊர் எது? = யாழ்ப்பாணம் - நல்லூர்

53) தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு பெருந்தொண்டாற்றியவர் யார்? = ஆறுமுகநாவலர்

54) ‘ஆறுமுக நாவலரை வசனநடை கைவந்த வல்லாளர்’ - எனப் பாரட்டியவர் யார்? = பரிதிமாற்கலைஞர்

55) எதற்காக பரிதிமாற்கலைஞர் நாவலரை வசனநடை கைவந்த வல்லாளர் என்று பாராட்டினார்? = உரைநடைக்கு ஆற்றிய தொண்டிற்காக

56) ஆறுமுகனார்க்கு ‘நாவலர்’ பட்டத்தை சூட்டியவரகள் யார்? = திருவாவடுதுறை ஆதினம் - (சுப்ரமணிய தேசிகர்)

57) முதன் முதலில் இலக்கண வலுவற்ற தூய்மையான எளிய தமிழ் உரைநடையை கையாண்டவர் யார்? = ஆறுமுக நாவலர்

58) ஆறுமுகனார் அச்சுக்கூடம் அமைத்த இடம் எது? = சென்னை

59) ஒன்று முதல் நான்கு வகுப்புகளுக்கான பால பாடங்கள் எழுதி அச்சிட்டு வெளியிட்டவர் யார்? = ஆறுமுக நாவலர்

60) ஆறுமுக நாவலர் முதன் முதலில் யாரிடம் தமிழ் கற்றார்? = சுப்ரமணிய உபாபதி

61) சைவத்தையும், தமிழையும் தன் இரு கண்களாக கருதியவர் யார்? = ஆறுமுக நாவலர்

62) யாருடைய திருப்பாடல்களுக்கு எதிராக ஆறுமுக நாவலர் மருட்பா என்ற நூலை எழுதினார்? = இராமலிங்கனார் பாடல்களுக்கு எதிராக

63) ஆறுமுக நாவலர் பதிப்பித்த நூல்கள் சிலவற்றை கூறுக? = பாரதம், பெரியபுராணம், திருக்குறள், பரிமேலழகர் உரை, இலக்கணா வினா - விடை, இலக்கணச் சுருக்கம், இலக்கண கொத்து, இலக்கச் சூறாவளி, நன்னூல் விருத்தியுரை, நன்னூல் காண்டிகையுரை, கந்தபுராணம்

64) ஜி.யு.போப் பிறந்த நாடு எது? = பிரான்ஸ் - எட்வர்ட் தீவு

65) சமயப்பணியாற்ற போப் தேர்ந்தெடுக்கப்பட்ட வயது எது? = 19 வது வயது

66) சமயப்பணியாற்ற போப் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு எது? = 1839 ஆம் ஆண்டு

67) ஜி.யு.போப் அவர்கள் சமயப்பணியாற்றிய இடங்கள் யாது? = சென்னை - சாந்தோம்; சாயர்புரம் - திருநெல்வேலி

68) சாயர்புரத்தில் ஜி.யூ,போப் சமயப் பணியாற்றிய ஆண்டுகள் யாது? = 1842 - 1849

69) ஜி.யூ.போப் தமிழ்நாட்டிற்கு வந்த ஆண்டு எது? = 1839 ஆம் ஆண்டு

70) ஜி.யூ.போப் மீண்டும் இங்கிலாந்துக்கு சென்ற ஆண்டு யாது? = 1850 - 30 வது அகவை

71) ஜி.யூ.போப் திருமணம் செய்து கொண்டு மீண்டும் இந்தியா திரும்பிய பிறகு சமயப்பணியாற்றிய இடம் எது? = தஞ்சை

72) ஜி.யூ.போப் அவர்கள் எத்தனை ஆண்டுகள் தஞ்சையில் சமயப் பணியாற்றினார்? = 8 ஆண்டுகள்

73) போப் தமிழ்மொழி பற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிய இதழ்கள் எது? = 1). இந்தியன் சஞ்சிகை; 2). இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு

74) ஜி.யூ.போப் எந்த நூலின் செய்யுள்களை தொகுத்து தமிழ்செய்யுட் கலம்பகம் என்ற நூலை எழுதினார்? = நீதி நூல்களிருந்து

75) நீதி நூல்களிருந்து எத்தனை செய்யுள்களை தொகுத்து ஜி.யூ.போப் அவர்கள் தமிழ்செய்யுட் கலம்பகம் என்ற நூலை உருவாக்கினார்? = 600 செய்யுட்கள்

76) ஜி.யூ.போப் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஆண்டு யாது? = 1900

77) ஜி.யூ.போப் எந்த வயதில் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்? = 80 வது அகவை

78) ஜி.யூ.போப் எந்த வயதில் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்? = 66 வது வயதில் - 1886 ஆம் ஆண்டு

79) ஜி.யூ.போப் பதிப்பித்த நூல்கள் சில கூறுக? = புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன்

80) 'தம் கல்லறையில் இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக்கொண்டிருக்கிறான்' - என்று தன் உயிலில் எழுதி வைத்தவர் யார்? = ஜி.யூ.போப்

81) ஜி.யூ.போப்பின் தமையனார் பெயர் யாது? = ஹென்றி

82) ஜி.யூ.போப் அவர்கள் கல்லூரி ஆசிரியராக இருந்த போது அவர் போதித்த பாடங்கள் யாது? = கணிதம், அறிவாய்வு (தருக்கம்), மெய்யறிவு (தத்துவம்)

83) பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்காக இலக்கணம் எழுதியவர் யார்? = ஜி.யூ.போப்

84) ஜி.யூ.போப் ஆராய்ச்சிக் கட்டுரையில் இடம் பெற்றுள்ள நூல்கள் யாது? = புறநானூற்று பாடல்கள், புறப்பொருள் வெண்பாமாலை, திணை விளக்கங்கள், தமிழ்ப்புலவர் வரலாறு

85) ஜி.யு.போப் அவர்கள் உதகமண்டலம் சென்ற ஆண்டு எது? = 1858 ஆம் ஆண்டு - 38 வது அகவையில் - தஞ்சையில் இருந்து 24 நாட்கள் மாட்டுவண்டியில் பயணம் செய்து உதகை சென்றார்

86) ஜி.யு.போப் எத்தனை ஆண்டுகள் திருக்குறளை படித்து சுவைத்தார்? = 40 ஆண்டுகள்

87) ஜி.யு.போப் அவர்களின் பிறப்பு இறப்பு ஆண்டுகள் யாது? = 1820 - 1908

88) ஜி.யு.போப் அவர்கள் தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராக பணியாற்றிய இடம் எது? = இங்கிலாந்து பல்கலைக்கழகம்

89) இங்கிலாந்தில் பல்கலைக்கழகத்தில் ஜி.யு.போப் அவர்கள் தமிழ், தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராக பணியாற்றிய ஆண்டுகள் யாது? = 1885 - 1908 - (23 ஆண்டுகள்)

90) ஜி.யு.போப் - க்கு 'மறை நூற் புலவர்' என்ற பட்டத்தை வழங்கியவர் யார்? = இங்கிலாந்தில் கந்தர் புரி அத்தியட்சர்

91) ஜி.யு.போப்பிற்கு 'மறை நூற் புலவர்' என்ற பட்டம் எந்த இடத்தில் கொடுக்கப்பட்டது? = உதகைமண்டலம்

92) ஜி.யு.போப் பாய்மரக்கப்பலில் இங்கிலாந்தில் இருந்து தமிழ்நாட்டுக்கு வர எத்தனை நாட்கள் ஆகின? = 8 மாதங்கள்

93) ஜி.யு.போப் அவர்கள் இங்கிலாந்தில் இருந்து தமிழ்நாட்டுக்கு வரும் பொழுது எத்தனை நாட்களில் தமிழ் கற்றுக் கொண்டார்? = 8 மாதங்கள்

94) ஜி.யு.போப் அவர்கள் சாயர்புரத்தில் யாரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களை கற்றார்? = ஆரியங்காவுப் பிள்ளை, இராமானுஜக் கவிராயர்

95) எச்சங்கத்தின் மூலம் ஜி.யு.போப் அவர்கள் இங்கிலாந்திலிருந்து சென்னைக்கு சமயப்பணியாற்ற வந்தார்? = வெஸ்லியன் சங்கம்

96) எந்த சங்கத்தின் மூலம் ஜி.யு.போப் அவர்கள் சென்னையிலிருந்து சாயர்புரத்திற்கு சமயப் பணியாற்றிய சென்றார்? = எஸ்.பி.ஜி நற்சங்கம் மூலம்

97) ஜி.யு.போப் அவர்கள் எங்கு சமயப்பணியாற்றும் போது புறநானூறு, நன்னூல், திருவாசகம், நாலடியார் போன்ற நூல்களை பயின்று அவற்றை மொழிபெயர்த்து வெளியிட்டார்? = தஞ்சையில்

98) 'பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க' - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் யாது? = கம்பராமாயணம்

99) குறில் எழுத்து எத்தனை மாத்திரை அளவில் ஒலிக்க வேண்டும்? = 1 மாத்திரை கால அளவில்

100) நெடில் எழுத்து எத்தனை மாத்திரை அளவில் ஒலிக்க வேண்டும்? = 2 மாத்திரை கால அளவில்

101) மெய்யெழுத்துகள் எத்தனை மாத்திரை அளவில் ஒலிக்க வேண்டும்? = ½ மாத்திரை கால அளவில்

102) உகரம் குறிலானால் எத்தனை மாத்திரை அளவில் ஒலிக்க வேண்டு? = 1 மாத்திரை அளவில்

103) கு, சு, டு, து, பு, று - என்ற வல்லின மெய்களின் மேல் 'உகரம்' ஊர்ந்து வரும் எழுத்துகள் எவ்வாறு அழைக்கப்படுகிறது? = குற்றியலுகரம்

104) குற்றியலுகரத்தின் மாத்திரை அளவு யாது? = ½ மாத்திரை

105) ஈற்று அயலெழுத்தாகத் தனிநெடில், ஆய்தம், உயிர்மெய், வல்லினம், மெல்லினம், இடையினம், ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைப் பெற்று வரும் எழுத்துகள் எது? = குற்றியலுகரம்

106) குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? = 6 வகை ( 1. நெடில் தொடர், 2. ஆய்த தொடர், 3. உயிர் தொடர், 4. வன் தொடர், 5. மென் தொடர், 6. இடை தொடர் )

107) ஆய்தத்தொடர் குற்றியலுகரத்திற்கு எ.கா சிலக் கூறுக? = எ்கு, க்கு, அ்து

108) வல்லினத்தொடர் குற்றியலுகரத்திற்கு எ.கா சிலக் கூறுக? = சுக்கு, கச்சு, பட்டு

109) மென்தொடர் குற்றியலுகரத்திற்கு எ.கா சிலக் கூறுக? = சங்கு, மஞ்சு, நண்டு, சந்து

110) இடைத்தொடர் குற்றியலுகரத்திற்கு எ.கா சிலக் கூறுக? = கொய்து, சார்பு, மூழ்கு

111) இரண்டு எழுத்துக்களை மட்டும் பெற்று வரும் குற்றியலுகரம் எது? = நெடில் தொடர் குற்றியலுகரம் - எ.கா :- ஆடு, மாடு, காது

112) குறுகிய ஓசை உடைய இகரம்____எனப்படும்? = குற்றியலிகரம்

113) குற்றியலிகரத்தின் மாத்திரை அளவு யாது? = ½ மாத்திரை

114) குற்றியலிகரம் சில எ.கா கூறுக? =

115) 'மியா' - என்னும் அசைச்சொல்லும் எதன் வகையாக கருதப்படுகிறது? = குற்றியலிகரம் - [ எ.கா :- கேண்மியா - கேள் + மியா; சென்மியா - செல் + மியா ]

116) தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து குறையாமல் ஒலிக்கின்ற 'உ'கரம்___எனப்படும்? = முற்றியலுகரம்

117) இனியவை நாற்பது என்ற நூலின் ஆசிரியர் யார்? = மதுரைத் தமிழாசிரியர் மகன் பூதஞ்சேந்தனார்

118) 'மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க்கெல்லாம்' - என்ற வரி இடம் பெற்றுள்ள நூல் யாது? = இனியவை நாற்பது

119) இனியவை நாற்பது என்ற நூலில் மொத்தம் எத்தனை இனிய சொற்கள் கூறப்பட்டுள்ளன? = 124 இனியச் சொற்கள்

120) பதிணெண் கீழ்க்கணக்கு நூல் தொகுப்பில் நாற்அபது பாடல்கள் கொண்ட நான்கு நூல்களில் இனியவை நாற்பது எத்தனையாவது நூலாகும்? = இரண்டாவது நூலாகும்

121) இனியவை நாற்பது என்ற நூலில் நான்கு இனிய சொற்களை எடுத்துச் சொல்லும் செய்யுள்கள் மொத்தம் எத்தனை? = நான்கு செய்யுள்கள் - ( 1, 3, 4, 5)

122) க.சச்சிதானந்தன் பிறந்த ஊர் எது? = பருத்திதுறை - யாழ்ப்பாணம் - இலங்கை

123) க.சச்சிதானந்தன் படைப்புகள் சிலவற்றைக் கூறுக? = ஆனந்ததேன் (கவிதை - 1954), அன்னபூரணி (புதினம்), யாழ்ப்பாணக்காவியம் (1998)

124) எந்த புலவரின் பாடல்களில் கம்பனின் மிடுக்கும், பாரதியின் சினமும் காணப்படும்? = க.சச்சிதானந்தன்

125) க.சச்சிதானந்தன் யாரிடம் முறையாக தமிழ்க் கற்றார்? = மகாவித்வான் நவநீத கிருட்டிண பாரதியார்

126) க.சச்சிதானந்தன் அவர்கள் எவற்றை தனக்கு வேண்டாமென்று தன் பாடல்களில் குறிப்பிடுகிறார்? = பொற்குவியல்கள், புகழுரைகள், மணிமுடி

127) க.சச்சிதானந்தன் அவர்கள் எதை தனக்கு வேண்டுமென்று தன் பாடல்களில் குறிப்பிடுகிறார்? = கம்பனின் கவிதகள், சுவைமிக்க நூல்கள்

128) யாருடைய கவிதைகள் தமிழுக்கு உயிராய் விளங்குகிறது என்று க.சச்சிதானந்தன் அவர்கள் குறிப்பிடுகிறார்? = கம்பனின் கவிதைகள்

129) க.சச்சிதானந்தன் எந்த மூன்று மொழிகளில் புலமை பெற்றவர் ஆவார்? = தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம்

130) 'ஏன்?, என்ன?, எப்போது?, எப்படி?, எங்கே?, யார்? எனும் அன்புத்தொண்டர் ஆறுபேர்கள் அறியச் செய்வார் செய்தியை' - என்று செய்தியை பற்றிக் கூறியவர் யார்? = அறிஞர் கிப்ளிங்

131) ஏன்? என்ன? எப்போது? எப்படி? எங்கே? யார்? எனும் வினாக்களுக்கு விடைகள் இடம்பெறும் பக்கம் எது? = செய்தியின் முகப்புப் பக்கம்

132) ஏன்? என்ன? எப்போது? எப்படி? எங்கே? யார்? எனும் வினாக்களுக்கு விடைகள் காணும் பணியை எதற்கு ஒப்பாக கூறப்படுகிறது? - கடலில் மூழ்கி முத்தெடுப்பது போன்ற அரிய பணி.

133) செய்தியை பெறுவது____போன்றதாகும்? = துப்பறிதல் போன்றதாகும்

134) செய்தியாளர்கள் எவற்றை படித்து செய்தியை திரட்டுகிறார்கள்? = அரசின் அறிக்கை, வாணிகக் குழுக்களின் வெளியீடுகள், நிதியமைச்சரின் வரவு செலவுத் திட்டங்கள் போன்றவற்றை படித்து

135) செய்தியாளர்கள் அறவியல் ஆய்வு முறைகளையும் அவற்றை எப்படி பயன்படுத்துவது என்பதையும் அறிய உதவுவது எது? = புள்ளியியல்

136) செய்தியை திரட்டும் முறைகள் மொத்தம் எத்தனை? = 5 முறை (1. நிகழ்ச்சியில் பங்கேற்றல், 2. நிகழ்ச்சியின் பார்வையாளராகுதல், 3. வினாக்கள் கேட்டல், 4. படித்தறிதல், 5. பொதுமக்களின் கூறெடுப்பு ஆய்வை நடத்துதல்)

137) எந்த இதழின் செய்தியாளர் இந்திய சீனப்போரின் போது நேரடியாகப் போர் நடைபெறிகின்ற இடத்திற்குச் சென்று செய்திகளைத் திரட்டினார்? = இலண்டன் டைம்ஸ் இதழ் செய்தியாளர்

138) எந்த பத்திரிக்கைச் செய்தியாளர் தில்லியிலுள்ள சிறைச்சாலையின் நிலை பற்றி அறிய தானே சிறைப்பட்டு செய்திகளைத் திரட்டித்தந்து புகழ் பெற்றார்? = இந்தியன் எக்ஸ்பிரஸ்

139) இதழில் கலைச்சொற்கள் :-

| | |
|---|---|
| Bulletin | சிறப்புச்செய்தி இதழ் |
| Deadline | குறித்த காலம் |
| Editorial | தலையங்கம் |
| Fake News | பொய்ச்செய்தி |
| Flash News | சிறப்புச்செய்தி |
| Folio No | இதழ் எண் |
| Green Proof | திருத்தப்படாத அச்சுப்படி |
| Layout | செய்தித்தாள் வடிவமைப்பு |

140) செய்தியின் பகுதிகள் மொத்தம் எத்தனை? = 3 பகுதி - (1. தலைப்புச் செய்தி, 2. முகப்புச் செய்தி, 3. உடல்பகிதிச் செய்தி)

141) 'காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீ தான்' - என்று பத்திரிக்கைப் பெண்ணை பார்த்து பாராட்டியவர் யார்? = பாரதிதாசன்

142) திருவள்ளுவ மாலையில் உள்ள பாடல்கள் மற்றும் பாடிய புலவர்களின் எண்ணிக்கை யாது? = 53 புலவர்கள் + 55 பாடல்கள்

143) 'தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட' என்ற பாடலை பாடியவர் யார்? = கபிலர்

144) திருக்குறளின் பெருமை + திருவள்ளுவரின் பெருமை - ஆகிய இரண்டை பற்றியும் புகழ்ந்து பாடப்பட்ட நூல் தொகுப்பு எது? = திருவள்ளுவமாலை

145) நளவெண்பாவின் நூல் அமைப்பு யாது? = 3 காண்டம் (சுயம்வர காண்டம், கலிதொடர் காண்டம், கலிநீங்கு காண்டம்) + 431 வெண்பாக்கள் கொண்டது

146) நளவெண்பாவின் ஆசிரியர் பெயர் யாது? = புகழழேந்தி புலவர்

147) புகழேந்தி புலவரை ஆதரித்த வள்ளல் யார்? = சந்திரன் சுவர்க்கி

148) தமயந்தி எந்த நாட்டின் மன்னனரின் மகள் ஆவாள்? = விதர்ப்ப நாட்டு மன்னன் வீமராசன் மகள் ஆவாள்

149) நளனின் வரலாற்றை பற்றி கூறும் வேறு நூல் எது? = நைடதம்

150) சில நொடிகளில் மில்லியன் கணக்குகளைச் செய்து காட்டும் கருவி எது? = கணினி

151) மனிதர்கள் கணக்கிட முதலில் பயன்படுத்திய படிவம் யாது? = மணிச்சட்டம்

152) கணினி உருவாக காரணமாக இருந்த முதல் படிவம் எது? = மணிச்சட்டம்

153) முதன் முதலில் கணக்கிடும் கருவி கண்டறிந்தவர் யார்? = பிளேஸ் பாஸ்கல்

154) பிளேஸ் பாஸ்கல் அவர்களின் நாடு எது? = பாரிஸ்

155) கணினியின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்? = சார்லஸ் பாப்பேஜ்

156) சார்லஸ் பாப்பேஜ் எந்த நாட்டைச் சேர்ந்தவர் ஆவார்? = இங்கிலாந்து

157) முதலில் கணினி வடிவமைக்கப்பட்ட ஆண்டு எது? = 1833

158) கணினியின் முதல் செயல் திட்ட வடிவாளர் (கணித செயல்பாட்டு கட்டளைகள் வகுத்தவர்) யார்? = கவிஞர் பைரனின் மகள் லேடிலவ்லேஸ்

159) கவிஞர் பைரன் எந்த மொழிக் கவிஞர் ஆவார்? = ஆங்கிலக் கவிஞர் ஆவார்

160) ஹார்வார்டு பல்கலைக்கழக பேராசிரியர் ஐக்கன் + ஐ.பி.எம்.பொறியாளர் துணையுடன் உருவாக்கிய எண்ணிலக்க கணினியின் பெயர் என்ன? = ஹார்வார்டு மார்க் - 1

161) கணினியின் வகைகள் யாது? = 1. பல்லூடக வசதி கொண்ட கணினி, 2. மடிக்கணினி, 3. கையடக்கக் கணினி

162) கணினியை இணையம் வடிவத்திற்கு வித்திட்டவர் யார்? = ஜான் பாஸ்டல்

163) ஜான் பாஸ்டல் எந்த நாட்டை சேர்ந்த அறிஞர் ஆவார்? = அமெரிக்கா

164) செய்தி மாற்றத்திற்கு மின்காந்த நாடா பயன்படுத்திய ஆண்டு எது? = 1960

165) ஈதர்நெட் அட்டை சிறுபலகையை எந்த வலைப்பின்னலில் பயன்படுத்தினர்? = குறும்பரப்பு வலைப்பின்னல்

166) ஒரு வட்டாரத்துக்குள் உள்ள கணினிகளை இணைப்பதற்கு பெயர் யாது? = அகன்ற பரப்பு வலைப்பின்னல்

167) இணையத்திற்கு உலகளாவிய வலைப்பின்னல் என்று பெயரிட்டவர் யார்? = டி பிம்பெர்னர்லீ

168) டி பிம்பெர்னர்லீ அவர்கள் எந்த பல்கலைக்கழகத்தை சேர்ந்தவர் ஆவார்? = ஹார்வார்ட் பல்கலைக்கழகம்

169) எந்த ஆண்டு இணையத்திற்கு உலகளாவிய வலைப்பின்னல் என்று பெயரிடப்பட்டது? = 1989

170) பிம்பெர்னர்லீ ஒரு____மொழி வல்லுநர் ஆவார்? = இயற்பியல் வல்லுநர்

171) பிம்பெர்னர்லீ எந்த நாட்டின் இயற்பியல் வல்லுநர் ஆவார்? = சுவிட்சர்லாந்து

172) தமிழ் எழுத்துக்களை எழுதவும், ஒலிக்கவும் கற்றுத்தரும் இணையத்தளம் எது? = தமிழம்

173) 'கடந்த இருபதாண்டுக் கணினிப் பயணத்தில் இணையத்தின் பங்கு மிகச்சிறந்தது' - என்று கூறியவர் யார்? = பில்கேட்ஸ்

174) 'தேன்நுகர் வண்டு மதுதனை உண்டு' - என்ற பாடல் இடம்பெற்றுள்ள நூல் யாது?= விவேகசிந்தாமணி

175) காந்திபுராணம் என்ற நூலை எழுதியவர் யார்? = அசலாம்பிகை அம்மையார்

176) காந்திபுராண நூலில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது? = 2034 பாடல்கள்

177) அசலாம்பிகை அம்மையார் பிறந்த ஊர் யாது? = இரட்டணை - திண்டிவனம்

178) அசலாம்பிகை அம்மையார் இயற்றிய வேறு நூல்கள் சிலவற்றை கூறுக? = ஆத்திசூடி வெண்பா, திலகர் புராணம், குழந்தை சுவாமிகள் பதிகம், இராமலிங்க சுவாமிகள் சரிதம்

179) அசலாம்பிகை அம்மையார் இயற்றிய இராமலிங்க சுவாமிகள் சரிதம் என்ற நூலில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை யாது? = 409 பாடல்கள்

180) அசலாம்பிகை அம்மையார் யாரை தாய்மையன் பிறனை எனக் குறிப்பிடுகிறார்? = காந்தியடிகளை

181) அசலாம்பிகை அம்மையார் அவர்களை 'இக்கால ஔவையார்' என்று பாராட்டியவர் யார்? = திரு.வி.க

182) ஆங்கிலேயரை எதிர்த்து ஆயுதம் ஏந்தி போராடிய முதல் பெண் யார்? = வேலு நாச்சியார்

183) வேலுநாச்சியாரின் பிறப்பு மற்றும் இறப்பு ஆண்டுகள் யாது? = கி.பி. 1730 - 1796

184) வேலுநாச்சியார் எந்த மாவட்டத்தை சேர்ந்தவர் ஆவார்? = இராமநாதபுரம்

185) வேலுநாச்சியார் அவர்களின் கணவர் பெயர் யாது? = முத்துவடுகநாதர்

186) சிவங்கைச் சீமையின் மீது ஆங்கிலேயர் படையெடுத்த ஆண்டு எது? = கி.பி. 1772

187) சிவங்கை மன்னர் முத்துவடுகநாதர் இறந்த ஆண்டு யாது? = கி.பி. 1772

188) வேலுநாச்சியார்க்கு 5000 படை வீரர்களை அனுப்பியவர் யார்? = ஹைதர் அலி

189) யாருடைய படைக்கு தலைமையேற்று வேலுநாச்சியார் சிவகங்கையை மீண்டும் மீட்டார்? = மருது சகோதரர்களின் படைக்கு

190) மருது சகோதரர்களின் படைக்கு தலைமையேற்று வேலுநாச்சியார் மீண்டும் சிவகங்கையை மீட்ட ஆண்டு எது? = கி.பி. 1780

191) அஞ்சலையம்மாள் பிறந்த இடம் யாது? = முதுநகர் - கடலூர்

192) அஞ்சலையம்மாள் பிறந்த ஆண்டு யாது? = 1890

193) அஞ்சலையம்மாள் தன் பொதுவாழ்க்கையை தொடங்கிய ஆண்டு எது? = 1921 - ஒத்துழையாமை இயக்கத்தின் போதே

194) அஞ்சலையம்மாள் கலந்து கொண்ட போராட்டங்கள் கூறுக? = நீலன் சிலை அகற்றும் போராட்டம், உப்புக்காய்ச்சும் போராட்டம், தனியாள் அறப்போராட்டம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், மறியல் போராட்டம் ஆகியவை

195) எந்த போராட்டத்தில் அஞ்சலையம்மாள் கலந்து கொண்ட போது தன் மகளுடன் சிறை சென்றார்? = நீலன் சிலை அகற்றும் போராட்டத்தின் போது

196) அஞ்சலையம்மாளின் மகள் பெயர் யாது? = அம்மாக்கண்ணு

197) தன் தாயாருடன் நீலன் சிலை அகற்றும் போராட்டத்தில் ஈடுபட்ட போது அம்மாக்கண்ணுவின் வயது என்ன? = 9 வயது

198) காந்தி அவர்கள் அஞ்சலையம்மாளின் மகள் அம்மாக்கண்ணுவை எங்கு அழைத்துச் சென்றார்? = வார்தா ஆசிரம்

199) வார்தா ஆசிரம் அமைந்துள்ள மாநிலம் எது? = மகாராஷ்டிரா

200) அம்மாக்கண்ணுவிற்கு காந்தியடிகள் வைத்த பெயர் என்ன? = லீலாவதி

201) 'தென்னாட்டின் ஜான்சிராணி' - என்று யாரை காந்தியடிகள் போற்றுகிறார்? = அஞ்சலையம்மாள்

202) பர்தா வேடமணிந்து குதிரை வண்டியில் காந்தியடிகளை ஏற்று சென்றவர் யார்? = அஞ்சலையம்மாள்

203) நான் கண்ட பாரதம் (எழுபதாண்டு நினைவாக) - என்ற நூலை எழுதியவர் யார்? = அம்புஜத்தம்மாள்

204) அம்புஜத்தம்மாள் பிறந்த ஆண்டு யாது? = 1899

205) அம்புஜத்தம்மாள் யாருடைய எளிமையான தோற்றத்தினால் கவரப்பட்டு தானும் எளிமையாக வாழ்ந்தார்? = அன்னை கஸ்தூரிபாய்

206) யாருடைய பாடல்களை பாடி அம்புஜத்தம்மாள் மக்களின் மனதில் விடுதலையுணர்வை ஊட்டினார்? = பாரதியார்

207) யாருடன் நட்புக்கொண்டு அம்புஜத்தம்மாள் பெண்ணடிமைக்கு எதிராக போராடினார்? = கோதைநாயகி, ருக்மணி லட்சுமிபதி

208) சீனிவாசகாந்தி நிலையம் - என்ற தொண்டு நிறுவனத்தை நிறுவியவர் யார்?= அம்புஜத்தம்மாள்

209) அம்புஜத்தம்மாள் ஆரம்பித்த சீனிவாசகாந்தி நிலையத்தின் பெயரில் சீனிவாசன் என்பது யாருடைய பெயர்? = அவரின் தந்தை பெயர்

210) எந்த ஆண்டு அம்புஜத்தம்மாளுக்கு நடுவண் அரசு ‘தாமரைத்திரு’ விருது அளித்து? = 1964

211) ‘பெற்ற தாயும் பிறந்தபொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தனவே’ - என்ற வரியை பாடியவர் யார்? = பாரதியார்

212) ‘தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவர்கோர் குணமுண்டு’ - என்று தொடங்கும் பாடலை பாடியவர் யார்? = நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார்

213) ஒரு தொடரில் இரு சொற்கள் அமைந்து அவற்றுக்கிடையில் சொல்லோ, உருபோ மறையாமல் நின்று பொருளை உணர்த்தும் தொடர்_______எனப்படும்? = தொகா நிலைத்தொடர்

214) தொகா நிலைத்தொடர்கள் மொத்தம் எத்தனை வகைப்படும்? = 9 வகை - அவை -

1. எழுவாய்த்தொடர் - எ.கா :- முல்லை வந்தாள்
2. விளித்தொடர் - எ.கா :- முருகா வா
3. வினைமுற்றுத்தொடர் - எ.கா :- கண்டேன் சீதையை
4. பெயரெச்சத்தொடர் - எ.கா :- பாடிய பாட்டு
5. வினையச்சத்தொடர் - எ.கா :- ஓடி வந்தான்
6. வேற்றுமைத்தொடர் - எ.கா :- வீட்டைக்கட்டினான்
7. இடைச்சொற்றடர் - எ.கா :- மற்றொன்று, சோவெனப் பெய்தது
8. உரிச்சொற்றடர் - எ.கா :- மாமுனிவர், கடிநகர்
9. அடுக்குத்தொடர் - எ.கா :- வாழ்க வாழ்க, அருமையருமை

215) திருமந்திரம் என்ற நூலை எழுதியவர் யார்? = திருமூலர்

216) சைவத்திருமுறைகளின் வரிசையில் திருமந்திரம் எத்தனையாவது திருமுறையாக வைக்கப்பட்டுள்ளது? = 10 வது திருமுறையாக

217) தமிழ் மூவாயிரம் - என்று அழைக்கப்படும் நூல் யாது? = திருமந்திரம்

218) 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் யாது? = திருமந்திரம்

219) திருமந்திரத்தில் புகழ்பெற்ற தொடர் எது? = ஒன்றே குலம் ஒருவனே தேவன்

220) திருமந்திரத்தின் நூல் அமைப்பு யாது? = 9 தந்திரங்கள் + 232 அதிகாரம் + 3000 பாடல்கள்

221) திருமந்திர பாடலில் உள்ள மூன்றாம் தந்திரம் எத்தனை பாடல்களைக் கொண்டது? = 724 பாடல்கள்

222) திருமந்திரத்தில் இடம்பெற்ற சிறப்பு தொடர்கள் சில கூறுக?

1) உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
   உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே
2) நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
   அன்பும் சிவமும் இரண்டென்ப அறிவிலார்

223) தந்திரங்களாக பிரிக்கப்பட்ட நூல் எது? = திருமந்திரம்

224) பன்னிரு திருமுறை வரிசையில் 1 முதல் 9 வரை வரிசையில் இடம் பெற்ற திருமுறை நூல்கள் கூறுவது? = தோத்திரம்

225) பன்னிரு திருமுறை வரிசையில் 10 வது வரிசையில் இடம்பெற்ற திருமுறை நூல் எதைக் கூறுகிறது? = திருமந்திரம் சாஸ்திரம்

226) பன்னிரு திருமுறை வரிசையில் 11 வது வரிசையில் இடம்பெற்ற திருமுறை நூல் எதைக் கூறுகிறது? = பிரபந்தம் (இலக்கியம்)

227) பன்னிரு திருமுறை வரிசையில் 12 வது வரிசையில் இடம்பெற்ற திருமுறை நூல் எதைக் கூறுகிறது? = புராணவகையை கூறுகிறது

228) பிரபந்த இலக்கியம் என்று அழைக்கப்படும் நூல் எது? = 11 வது திருமுறை நூல்

229) வீரமாமுனிவருக்கு தமிழ் கற்பித்தவர் யார்? = சுப்ரதீபக் கவிராயர் (மதுரை)

230) வீரமாமுனிவர் அறிந்த மொழிகள் கூறுக? = இத்தாலியம், இலத்தின், கிரேக்கம், எபிரேயம், தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம்

231) தேம்பாவணி நூலின் நூல் அமைப்பு யாது? = 3 காண்டம் + 36 படலம் + 3615 விருத்தப்பா பாடல்கள்

232) தேம்பா + அணி = தேம்பாவணி - என்பதன் பொருள் யாது ? = வாடாத மாலை

233) தேன் + பா + அணி = தேம்பாவணி - என்பதன் பொருள் யாது? = தேன் போன்ற பாக்களை அணியாக உடையது

234) இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய 'சூசை மாமுனிவரை' பாட்டுடைத் தலைவராக கொண்டு இயற்றப்பட்ட நூல் யாது? = தேம்பாவணி

235) 'கிறித்துவ சமயத்தாரின் கலைக்களஞ்சியம்' - என்று போற்றப்படும் நூல் எது? = தேம்பாவணி

236) கொன்ஸ்டான் என்ற தன் இயற்பெயரை தமிழில் 'தைரியநாதசாமி' என்று மாற்றிக் கொண்ட புலவர் யார்? = வீரமாமுனிவர்

237) தைரியநாதசாமி என்பது எந்த மொழி சொல்லாகும்? = வடமொழி சொல்

238) வீரமாமுனிவர் தமிழகம் வந்த ஆண்டு எது? = கி.பி. 1710

239) வீரமாமுனிவர் இறந்த ஆண்டு யாது? = கி.பி. 1747

240) வீரமாமுனிவர் இறையடி சேர்ந்த இடம் எது? = அம்பலக்காடு

241) அம்பலக்காடு உள்ள மாநிலம் எது? = கேரளா மாநிலம் - கொச்சி

242) தமிழ் இலக்கிய இலக்கணங்களை கவிதை வடிவில் இருந்து **உரைநடையாக** மாற்றியவர் யார்? = வீரமாமுனிவர்

243) தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்ட நூல் எது? = தேம்பாவணி

244) திருக்குறளின் எந்த இரு பாக்களை வீரமாமுனிவர் இலத்தின் மொழியில் மொழி பெயர்த்தார்? = அறத்துப்பால் & பொருட்பால்

245) யோசேப்பு மற்றும் சூசை என வழங்கப்பட்ட ஜோசப் என்ற பெயரை 'வளன்' என்று தமிழில் மாற்றி வழங்கியவர் யார்? = வீரமாமுனிவர்

246) வீரமாமுனிவர் இயற்றிய வேறு நூல்கள் எது? = வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், செந்தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் இலக்கணம், பரமார்த்த குருகதை, தொன்னூள் விளக்கம், சதுரகராதி

247) வீரமாமுனிவர் பரமார்த்த குருகதையை முதன் முறையாக எந்த ஆண்டு எங்கு அச்சிட்டு வெளியிட்டார்? = கி.பி. 1728 - புதுவையில்

248) உவமைக்கும் உவமேயத்திற்கும் இடையே உவம உருபுகள் மறைந்து வருவதற்கு____என்று பெயர்? = உவமைத் தொகை

249) உவமைத்தொகையில் இடம் பெற்றுள்ள இரு சொற்களில் முதல் சொல்லாக அமைவது_____எனப்படும்? = உவமை எனப்படும்

250) உவமைத்தொகைக்கு சில எ.கா கூறுக? = தாமரை முகம் - தாமரை (உவமை); முகம் (உவமேயம்), மதிமுகம், மலரடி, கமலக்கண், மான்விழி, கயல்விழி

251) உவமைத்தொகை எத்தனை வகைப்படும்? = 4 வகை - அவைகள் முறையே

1) வினை உவமைத்தொகை - புலிக்கொன்றான் (புலி போலும் கொன்றான்)
2) பயன் உவமைத்தொகை - மழைக்கை (மழை போலும் கை)
3) மெய் உவமைத்தொகை - துடியிடை (துடி போலும் இடை வடிவம்)
4) உரு (நிறம்) உவமைத்தொகை - கார் கூந்தல் (கார் போலும் கூந்தல்)

252) உலக நிகழ்ச்சிகளை காட்டும் கண்ணாடி என்று எது கூறப்படுகிறது? = நாடகம்

253) நாடகத் தோற்றத்திற்கு அடிப்படை பண்பு எது? = போலச் செய்தல்

254) தமிழின் தொன்மையான வடிவம் என கூறப்படுவது எது? = நாடகம்

255) நாடகப் பாங்கிலான உணர்வுகளுக்கு இலக்கணம் வகுத்தநூல் எது? = தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல்

256) திருக்குறளில் நாடகம் அரங்கம் பற்றி கூறும் வரி எது? = கூத்தாட்டவைக் குழாத்தற்றே

257) நாடகமேத்தும் நாடகக்கணிகை என கூறப்படுபவர் யார்? = மாதவி

258) மாதவியை நாடகமேத்தும் நாடகக்கணிகை எனக் குறிப்பிடும் நூல் எது? = சிலப்பதிகாரம்

259) மாதவியை நாடகமேத்தும் நாடகக்கணிகை எனக் குறிப்பிட்டவர் யார்? = இளங்கோவடிகள்

260) தனிப்பாடல்களுக்கு மெய்ப்பாடு தோன்ற ஆடுவது___என்று பெயர்? = நாட்டியம்

261) ஒரு கதையைத் தழுவி வேடம் புனைந்து ஆடுவது____என்று பெயர்? = நாடகம்

262) நாட்டியம், நாடகம் - இவற்றின் பொதுவான சொல் எது? = கூத்து

263) நாடக இலக்கண நூல்கள் சில கூறுக? = முறுவல், சயந்தம், செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல், விளக்கத்தார் கூத்து, குணநூல், கூத்து நூல்

264) காட்சித்திரை, அரங்க அமைப்பு, இவற்றிற்கு இலக்கணம் கூறும் நூல் எது? = சிலப்பதிகாரம்

265) நாடகவியல் எந்னும் இலக்கணநூலை எழுதியவர் யார்? = பரிதிமாற்கலைஞர்

266) நாடகவியல் என்னும் நூல் எந்த வகையான நூலாகும்? = செய்யுள் வடிவ நூல்

267) தொழில் முறை நாடக அரங்குகளைப்பற்றிய செய்திகளை நன்கு ஆராய்ந்து எழுதப்பட்டுள்ள நூல் எது? = நாடகத்தமிழ்

268) நாடகத்தமிழ் என்ற நூலை எழுதியவர் யார்? = பம்மல் சம்மந்தனார்

269) நாடகக்கலை ஆராய்ச்சி நூல்கள் சிலவற்றை கூறுக?

1) மதங்கசூளாமணி - சுவாமி விபுலானந்தர்
2) சாகுந்தலம் - மறைமலையடிகள்
3) நாடகத்தமிழ் - பம்மல் சம்மந்தனார்

270) மத்தவிலாசனம் என்ற நூலை எழுதியவர் யார்? = மகேந்திரவர்ம பல்லவன் (7 - ஆம் நூற்றாண்டு)

271) நாயக்க மன்னர்கள் காலத்தில் தோன்றிய நாடகம் எது? = குறவஞ்சி

272) மராட்டிய மன்னர்கள் நாடகங்களை எங்கு நடத்தினர்? = கோவில்களில்

273) இராசராசேச்சுவர நாடகம் நடைபெற்ற ஆண்டு எது? = 11 ஆம் நூற்றாண்டு

274) செல்வக்குடியில் பிறந்த ஒருவன் நோயுற்று திருந்தி வாழ்வதாக அமையும் நாடகம் எது? = நொண்டி நாடகம்

275) நொண்டி நாடகம் வெளிவந்த ஆண்டு யாது? = கி.பி. 17 ஆம் நூற்றாண்டு பிற்பகுதி

276) இராமநாடகம் என்ற நூலை எழுதியவர் யார்? = அருணாச்சலக் கவிராயர் (18 ஆம் நூற்றாண்டு)

277) நந்தனார் சரித்திரம் என்ற நூலை எழுதியவர் யார்? = கோபால கிருட்டிண பாரதியார் (18 ஆம் நூற்றாண்டு)

278) கூத்துக்களின் வகைகள் யாது? = 4 வகை - 1. பாவைக்கூத்து, 2. தோற்பாவைக் கூத்து, 3. மரப்பாவைக்கூத்து, 4. தெருக்கூத்து

279) புராணக் கதைகளை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட கூத்து வகை எது? = தெருக்கூத்து

280) எந்த நூற்றாண்டில் சமுதாய சீர்திருத்தம் தொடர்பான நாடகங்கள் சிறப்பு பெற்றன? = 19 ஆம் நூற்றாண்டில்

281) டம்பாச்சாரி விலாசம் என்ற நூலை எழுதியவர் யார்? = காசி விசுவநாதர்

282) லிட்டன் பிரபு எழுதிய மறைவழி எனும் நூலைத் தழுவிய பெ.சுந்தரம் பிள்ளை எழுதிய கவிதை நாடகக் காப்பியம் எது? = மனோன்மணீயம்

283) முதல் தேசிய சமுதாய நாடகம் எது? = கதரின் வெற்றி

284) கதரின் வெற்றி என்ற தேசிய நாடகத்தை தொடந்து வெளிவந்த வேறு நாடகங்கள் எது? = தேசியக்கொடி, தேசபக்தி

285) 'நாடகச் சாலையொத்த நற்கலா சாலையொன்று நீடுலகில் உண்டோ நிகழ்த்து' - என்று கூறியவர் யார்? = கவிமணி

286) நாடக உலகின் இமயமலை மற்றும் தமிழ்நாடகத் தலைமையாசிரியர் என்று அழைக்கப்படுபவர் யார்? = சங்கரதாஸ் சுவாமிகள்

287) சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய நாடகங்களின் எண்ணிக்கை யாது? = 40

288) சங்கரதாஸ் சுவாமிகள் இயற்றிய நாடகங்கள் சில கூறுக? = பிரகலாதன், சிறுதொண்டர், இலகுவசா, பவளக்கொடி, அபிமன்யு,சுந்தரி

289) தமிழ் நாடகத்தந்தை, நாடகப் பேராசிரியர் என்று அழைக்கப்படுபவர் யார்? = பம்மல் சம்மந்தனார்

290) ஆங்கில எழுத்தாளரான ஷேக்ஸ்பியரின் நாடகங்களை தமிழில் மொழிபெயர்த்தவர் யார்? = பம்மல் சம்மந்தனார்

291) பம்மல் சம்மந்தனாரின் எந்த நாடகம் எழுபது ஆண்டுகளாக மேடையேறியது? = மனோகரா

292) நாடகம் பற்றிய சம்பந்தனாரின் நூல்கள் கூறுக? = நாடகமேடை நினைவுகள், நடிப்புக்கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி?

293) ஔவையார் நாடகம் வெளிவந்த ஆண்டு எது? = 1942

294) ஔவையார் நாடகத்தில் நடித்த நபர் யார்? = தி.க.சண்முகனார்

295) தமிழ்நாடக மறுமலர்ச்சியின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்? = கந்தசாமி

296) 'புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலார்' - என்ற வரி இடம்பெற்ற நூல் எது? = புறநானூறு

297) கம்பராமாயணத்தில் பாலகாண்டம் எத்தனையாவது காண்டமாகும்? = முதல் காண்டமாகும்

298) பாலகாண்டத்தில் உள்ள படலங்கள் எத்தனை? = 22 படலங்கள்

299) கம்பர் கம்பராமாயணத்தில் எந்த நதியின் வளத்தை பற்றிக் குறிப்பிடுகிறார்? = சரயு நதி

300) சரயு நதி தற்போது எந்த மாநிலத்தில் பாய்கிறது? = உத்திரபிரதேசம்

301) 'தாதுகு சோலை தோறும் சண்பகக்காடு தோறும்' - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? = கம்பராமாயணம்

302) 'தாதுகு சோலை தோறும் சண்பகக்காடு தோறும்' - எனத் தொடங்கும் பாடல் கம்பராமாயணத்தில் இடம்பெற்றுள்ள காண்டம் எது? = பாலகாண்டம்

303) கதை மாந்தரின் வடசொற் பெயர்களைத் தொல்காப்பிய நெறிப்படி தமிழ்ப்படுத்தியவர் யார்? = கம்பர்

304) தந்தை பெரியாரின் பகுத்தறிவு சிந்தனைகளைக் கவிதை வடிவில் தந்த புலவர் யார்? = பாரதிதாசன்

305) 'தூலம் போல் வளர்கிளைக்கு விழுதுகள் தூண்கள்' - எனத் தொடங்கும் பாடலை பாடியவர் யார்? = பாரதிதாசன்

306) 'தூலம் போல் வளர்கிளைக்கு விழுதுகள்' - என்ற வரி இடம்பெற்ற விழுதும் வேரும் என்ற பகுதி பாரதிதாசனின் எந்த நூலில் இடம்பெற்றுள்ளது? = அழகின் சிரிப்பு

307) பாரதிதாசனை புரட்சிக்கவி என்று பாராட்டியவர் யார்? = அறிஞர் அண்ணா

308) பாரதிதாசனை எந்த ஆண்டு அண்ணா அவர்கள் புரட்சிக்கவி என்று பாராட்டினார்? = 1946

309) பாரதிதாசன் எந்த ஆண்டு புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார்? = 1954

310) பாரதிதாசனின் படைப்புகள் எந்த ஆண்டு தமிழக அரசால் பொதுயுடைமையாக மாற்றப்பட்டன? = 1990

311) தொல்காப்பியம் கூறும் காட்டு உயிரிகளின் வரிசைகளை கூறுக :-

1) ஓரறிவு (மெய்யினால் அறிவது) - எ.கா :- புல், மரம்
2) ஈரறிவு (மெய், வாய்) - எ.கா :- நத்தை, சங்கு
3) மூவறிவு (மெய், வாய், மூக்கு) - எ.கா :- கரையான், அட்டை
4) நாலறிவு (மெய், வாய், மூக்கு, கண்) - எ.கா :- நண்டு, தும்பி, வண்டு
5) ஐயறிவு (மெய், வாய், மூக்கு, கண், செவி) - எ.கா :- விலங்கு, பறவை
